**இலங்கை சட்ட உதவி ஆணைக்கும் - 2022**

-------------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஆணைக் குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக் குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக் குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக் குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஆணைக் குழுவின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக் குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக் குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல், உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு

தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்காளித் தண்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித் தன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதியில் சீராக்கல் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறையொன்றை நிறுவனத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவினால் நிதி நிலைமை கூற்றுத் தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதி நிலைமை கூற்று படிவம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சட்ட உதவி ஆணைக்குழு 2022 ஆண்டின் நிதி நிலைமைக் கூற்று முன்னைய ஆண்டுகளின் படிவத்தின் படி தயாரிக்கப்பட்டது எனவும், அடுத்த வருடங்களில் அதனை சரியான படிவத்திற்கு இணங்க தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றின் படிவத்தின் பிரகாரம் ஆதனங்களின் மீள்மதிப்பீட்டின் மீது மிகை வேறாக காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்ட 03 வாகனங்களின் மீள்மதிப்பீட்டு மிகையாகிய ரூபா 1,550,000 இற்கான பெறுமதி உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அடுத்த வருடம் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் மிகுதிப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலத்தை குறைத்து ஒவ்வொரு ஆண்டிலும் அறிக்கையிடும் காலப்பகுதி முடிவடையும் தினத்தில் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முழுவதும் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு முடிந்திருந்த ரூபா 31,822,859 தொகை பெறுமதியான கணினிகள், அலுவலக | உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு பாரிய தொகையொன்று செலவிடுவதற்கு நேரிடுவதால், மீளளிப்பு அலுவல்களுக்காக போதியளவு பணம் காணப்படாமையால் இது மேற்கொள்ளல் தொடர்பாக சிக்கல் தன்மையொன்று காணப்படுகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள், தளபாடங்கள் ஆகிய சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன்படி, மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் படி திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 47 பந்தியின் பிரகாரம நியாயமான பெறுமதி என கணிக்க முடியாத அளவிலான வித்தியாசங்கள் மாத்திரம் காணப்படும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண விடயங்கள் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ஆணைக்குழுவினால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மோட்டார் வாகனம் தவிர ரூபா 92,137,572 தொகை பெறுமதியான ஏனைய ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அண்மித்த 05 வருடங்களுக்குள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு பாரிய தொகையொன்று செலவிடுவதற்கு நேரிடுவதால், மீளளிப்பு அலுவல்களுக்காக போதியளவு பணம் காணப்படாமையால் இது மேற்கொள்வதில் சிக்கல் தன்மையொன்று காணப்படுகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 49 பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண விடயங்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்கள் அடங்கக்கூடிய ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 1,220,000 தொகைக்கான 03 மோட்டார் வாகனங்கள் மாத்திரம் ரூபா 1,550,000 தொகை பெறுமதிக்காக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 950,000 தொகை கிரயத்தையுடைய 02 வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீள்மதிப்பீடு (Revalue) அலுவல்கள் மேற்கொள்ளப்படுவது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையாக காணப்படுவதுடன், முச்சக்கர வண்டி 2018 ஆம் ஆண்டிலே மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. எனவும், அதனை மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியது 2023 ஆண்டிலேயே என அறிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பந்தி 44 இன் பிரகாரம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மானியச் சொத்துக்கள் மற்றும் வருவாய்கள் என இனங்காண வேண்டியிருந்த போதிலும், ரூபா | எதிர்வரும் ஆண்டுகளின் போது இந்த சிக்கல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மூலதன மானியப் பெறுவனவுகள் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | 7,300,000 இற்கான மூலதன மானியப் பெறுவனவுகள் இந்த கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | வேண்டும். |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 80(இ) பிரகாரம் அறிக்கையிடும் திகதியில் 12 மாதங்களுக்குள் தீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் நடைமுறை பொறுப்புக்கள் என இனங் காணப்பட வேண்டியிருந்த போதிலும், பணிக்கொடை ஒதுக்கங்களுக்கு உரிய ஒட்டுமொத்த பெறுமதியாகிய ரூபா 82,528,824 தொகை நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் என இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டுகளின் போது இந்த சிக்கல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடைமுறைப் பொறுப்புக்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கணக்கீட்டின் கணித்தலின் படி ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் பெற வேண்டிய வட்டி வருமானம் முறையே ரூபா 533,292 தொகை மற்றும் ரூபா 357,079 தொகை எனினும், அது முறையே ரூபா 767,312 தொகை மற்றும் 399,989 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 234,020 தொகை மிகையாகவும், பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 42,910 தொகை மிகையாகவும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | முன்னைய ஆண்டுகளின் போது காட்டப்பட்டவாறே 2022 ஆண்டிலும் நிதிக் கூற்றுக்களில் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி காட்டப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்பு வட்டி வருமானம் நிதிக் கூற்றுக்களில் சரியாக காட்டப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| **விடயம்** | **தொகை** | **சமர்ப்பிக்கப் பட்டிருக்காத சான்றுகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | | | |
| ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 15,656,035 | கொள்வனவுக்குரிய உறுதிச் சீட்டுக்கள், பெறுமதி மதிப்பீட்டறிக் | 2009 ஆண்டின் போது நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கும் போது அதன் ஆரம்ப மீதியென 2009 ஆண்டிற்கு | நிலையான சொத்துக்களுக்குரிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய அட்டவணைகள் |

| | | |
|---|---|---|
| கைகள் | முன்னை ஆண்டுகளில் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு மற்றும் கிளைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணினிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகிய நிலையான சொத்துக்கள் கொள்வனவுகளாக இருந்ததுடன், இந்தத் தகவல்கள் ஒவ்வொரு ஆண்டிலும் காசேட்டின் அடிப்படையில் பெற்றுக்கொண்டதுடன், ஒவ்வொரு ஆண்டிலும் இந்த பதிவுகள் கணக்காய்வு செய்யப்பட்டதெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவில் கடமையாற்றிய பெண் உத்தியோகத்தர் ஒருவர் வெளிநாடு சென்று 5 வருடங்கள் கடந்திருந்த போதிலும், மீண்டும் சேவையில் இணைந்திருக்காததுடன், உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறிய காரணத்தினால் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 220,251 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த பெண் உத்தியோகத்தர் தவணை அடிப்படையில் செலுத்துவதற்கு இணங்கியிருந்தார் என அறிவிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் படி செலுத்த வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கழுத்துறை, பிபிலை மற்றும் நீர்கொழும்பு ஆகிய நிலையங்களின் கட்டிடங்களின் திருத்த வேலைகளுக்காக ரூபா 1,217,830 தொகைக்கான முற்பணம் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டு 01 வருடத்திற்கும் 04 வருடங்களுக்கும் இடைப்பட்ட | பிபிலை மற்றும் நீர்கொழும்பு நிலையங்களில் திருத்த வேலைகள் முடிவடைந்திருந்ததுடன், அதற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் 2023 ஏப்ரல் 29 திகதி தீர்க்கப்பட்டிருந்ததுடன், கழுத்துறை நிலைய திருத்த | முற்பணங்களை தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| காலம் கடந்திருந்த போதிலும் அந்த முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வேலைக்காக நீதி அமைச்சின் மூலம் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தமையால் நீதி அமைச்சுக்கு கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 11 | அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூபா 7,447,775 தொகைக்கான நிலையான வைப்புக்களுக்கு உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆணைக்குழுவின் ஊழியர்கள் சேவையை விட்டு விலகும் போது கொடுப்பனவு செய்ய நேரிடும் Gratuity இற்காக பணம் இன்மையால் ஒரு ஆண்டிற்காக ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் போன்ற தொகையொன்று Gratuity Provision இற்காக 2021 ஆண்டு வரை ஒதுக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆண்டின் போது அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. பணம் இன்மை மற்றும் அரச சுற்றறிக்கையின் படி செலவுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் காரணமாக இருந்ததென அறிவிக்கப்பட்டிருந்தது. | அதிகார சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 395 (ஏ) | நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக காசேடு பேணிச் செல்லும் உத்தியோகத்தரினாலேயே வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவில் காணப்படும் வெற்றிடங்கள் காரணமாக இது நேரிட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 ஆகஸ்ட் 18 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றிக்கையின் பிரிவு 9.1(ஆ) | 21 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 815,225 தொகை பெறுமதியான முற்பணங்களை தீர்க்கும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகள் கடைபிடிக்கப் பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய நிலைமை மற்றும் ஏனைய காரணிகள் மீது நிகழ்ச்சித் திட்டத் திகதி வித்தியாசப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதுடன், ஆனேகமான சந்தர்ப்பங்களில் முற்பணங்கள் தீர்த்தலின் மீதித்தொகை எங்களுக்கு தபால் மூலமே கிடைக்கப் பெறுவதனால் அவற்றில் காணப்படும் வினியோகத்தலில் தாமதம் காரணமாக நிகழ்ச்சித் திட்டங்கள் தீர்க்கும் அறிக்கைகள் தலைமை அலுவலகத்திற்கு தாமதமாக கிடைக்கின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றிக்கை மற்றும் நிதிப் பிரமாணங்கள் 315(1), 880 | பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடம் பிணைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் ஓய்வூதியத்திற்கு உரிமையில்லாத உத்தியோகத்தர்களாகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் (பொது தொழில் முயற்சிகள் தொடர்பான வழிகாட்டல் கோவையின்) பந்தி இலக்கம் 2.3 இல் அட்டவணை 1 இன் 1 ஆவது பந்தி | ஆணைக்குழுவினால் வழிகாட்டலின் படி மூலோபாய திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 – 2029 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றன என அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,906,980 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 15,754,042 தொகை ஆகும். அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 1,847,062 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆண்டின் ஆணைக்குழுவின் அரசாங்க மானியம் ரூபா 26,787,690 தொகையினாலும், பயிலுனர் மாணவர் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 1,208,000 தொகையினாலும் அதிகரித்தல் முக்கியமாக காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் 2022 இன் வரைவு வருடாந்த அறிக்கையின் படி சட்ட உதவி வழங்குவதற்காக 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு முன்கொண்டு வரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 38,099 தொகையாக காணப்பட்டதுடன், 2022 ஜனவரி முதல் திசெம்பர் வரை புதிதாக கோப்பிடப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை 11,380 தொகையாகக் காணப்பட்டமையால் அந்த காலப் பகுதியில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 49,479 தொகையாக இருந்தது. அவற்றில் 10,740 வழக்குகள் திசெம்பர் 31 திகதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அத் திகதியில் உள்ளவாறு மேலும் தீர்க்க வேண்டியிருந்த வழக்குகள் 38,739 தொகையாகும். அது மொத்த சேவை வழங்குவதற்கு இருந்த வழக்குகளின் எண்ணிக்கையில் 78 சதவீதமாகும். | பதில் அளித்திருக்கவில்லை. | சட்டத்தின் குறிக்கோள்களின் பிரகாரம் செயலாற்றுகை பேணப்பட வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்(சட்டம்) மற்றும் பணிப்பாளர் (நிருவாகம் மற்றும் விதி) ஆகிய பிரதான மூன்று பதவிகளுக்காகவும், | பணிப்பாளர் நாயகம் பதவி 2022 நவம்பர் முதல் வெற்றிடமாகியதுடன் கடமையை அணவல் செய்வதற்காக | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| ‘‘முகாமைத்துவ’’ சேவை தொகுதியை சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிகள் 29 உம் வெற்றிடமாகக் காணப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவின் நிருவாகி நியமனம் செய்யப்பட்டிருந்தது. ஏனைய இரண்டு பதவிகளும் உள்ளகப் பதவிகளாகும். அதற்கு தகைமைகள் பூர்த்தி செய்துள்ள நபர்கள் காணப்படாமையால் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் உள்ளது. இந்த சிக்கல்களை நிவர்த்தி செய்து முறைப் பிரகாரம் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக பொருத்தமான விதத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைமையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய பீஈடீ 01/2021 இலக்கங் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 பிரிவின் பிரகாரம் 2022 வருடாந்த அறிக்கை 2023 செப்தெம்பர் 11 திகதியளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - | சுற்றறிக்கைக்க இணங்க செயற்பட வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 40(1) பிரகாரம் ஆணைக்குழுவின் 2022 ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | இதற்கு முன்னர் அனைத்து ஆண்டுகளின் போதும் ஆணைக் குழுவின் உள்ளகக் கணக்காய்வு நீதியமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைப் படி உள்ளகக் கணக்காய்வாளர் பதவி ஒன்று காணப்படாததுடன், எவ்வாறாயினும் ஆட்சேர்ப்பு நடைமுறைக் கோவையை திருத்தும் போது இந்த பதவியை உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கங் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் (அரச முயற்சிகள் தொடர்பான வழிகாட்டல் கோவை) பந்தி இலக்கம் 2.3 இல் அட்டவணை 1 இல் பந்தி இலக்கம் 3 இல் வழிகாட்டலின் படி பாதீடொன்று தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 நவம்பர் 16 திகதிய சுற்றறிக்கை வெளியிடுவதற்கு முன்னர் அதாவது 2022 ஆண்டிற்கான பாதீடு 2021 ஜூன் 30 திகதிக்கு முன்னர் வரிசை அமைச்சான நீதி அமைச்சிற்கு அனுப்புவதற்காக நீதியமைச்சில் இருந்து அனுப்பப்பட்டிருந்த படிவத்தின் படி தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |